விவசாயிகள் பாதிக்கப்படாத நிலையில் திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது.

தமிழகத்தில் பஞ்சாலை நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள விசைத்தறி ஆலைகள்

* வினா எண் 37— திரு. ச. பாலகிருஷ்ணன்: திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பஞ்சாலை நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்ட விசைத்தறி ஆலைகள் எத்தனை? அவை எங்கெங்கு உள்ளன?

(ஆ) இந்த ஆண்டு புதிய ஆலைகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, (அ) மூன்று, சிவகிரி, பெரியார் மாவட்டம், அருப்புக்கோட்டை (முகவை மாவட்டம்) மற்றும் ஜெயங்கொண்ட சோழபுரம் (திருச்சி மாவட்டம்) ஆகிய இடங்களில் ஏற்கனவே விசைத்தறிகள் இருக்கின்றன. சுமார் 50 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மற்றும் பரமக்குடி (புதுக்கோட்டை மாவட்டம்) தாராபுரம் (பெரியார் மாவட்டம்), குமாரசாமி பேட்டை (தர்மபுரி மாவட்டம்) தளவாய்புரம் (இராமநாதபுரம் மாவட்டம்) ஜெக்கம்பட்டி (மதுரை மாவட்டம்) சங்கரன்கோயில் (திருநெல்வேலி மாவட்டம்) ராசிபுரம் (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) ஆம். இந்த ஆண்டு சுமார் 70 விசைத்தறி ஆலைகள் நிறுவுவதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. இவற்றின் மதிப்பு சுமார் 3½ கோடி ரூபாய் ஆகும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக விசைத்தறி ஆலைகள் ஆரம்பிக்கவேண்டும் என்றால் என்னென்ன விதிமுறைகளை அரசு போட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் இடங்களை தேர்ந்தெடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரிமைகள் வழங்குவது மத்திய அரசு. எத்தனை விசைத்தறிகள் என்ற அனுமதியை அளிப்பது மத்திய அரசு எந்த மாவட்டத்தில் போடுவது என்பதை

பெரும்பாலும் இங்கே எங்கே கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிறார்களோ அந்தப் பகுதிகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவும், கைத்தறி நெசவாளர்களை விசைத்தறி தொழிலாளர்களாக மாற்றவும் இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கூடங்கள் அமைக்கப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கவுள்ள ஆலைகள் பயிற்சிபெறும் தொழிலாளர்களுக்கு பயிற்சிக்காக உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதை அதிகரித்து தரவேண்டும் என்று கேட்டுள்ளார்கள். இந்த உதவித் தொகையை அதிகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் மிக மோசமான கிராமங்களில் அதாவது மிக கடைநிலையில் இருக்கிற கிராமங்களில், பின்தங்கிய கிராமங்களில் இந்த தொழிற்கூடங்களை அமைக்கிறோம். வேலை இல்லாமல் இருக்கிற அந்தப் பகுதியில் வாழ்கிற இளைஞர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. எனவே இப்போது கொடுக்கிற சம்பளத்தை உடனடியாக உயர்த்துகிற எண்ணம் அரசுக்கு இல்லை,

(முற்பகல் 9-50)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராசிபுரத்திலே கட்டுமானப் பணியினை ஆரம்பித்து இருக்கிற திட்டத்தில் 100 விசைத்தறிகள் கொண்ட கூடமாக அமைகிற நிலைமை இருக்கிறது. அதை 200 விசைத் தறிகள் கொண்ட கூடமாக மாற்றும் உத்தேசம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை.

திரு. கு. ரமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசைத்தறிகளுக்காக தனியான விசைத்தறி கூடங்களை ஏற்படுத்தி அதிலே 100 தறிகளைச் சேர்த்து நடத்துகிற முயற்சி ஒரு நல்ல முயற்சி. இப்படிப் பல்வேறு இடங்களில் தனித்தனியாக 1, 2 தறிகளை வைத்துக்கொண்டு விம்சாயக் கூலித் தொழிலாளர்களைக் கடுமையாகச் சுரண்டும் நிலைமை இருக்கிறது. கோவை மாவட்டத்தைக் குறிப்பிடவில்லை அமைச்சர் அவர்கள். அந்த மாவட்டத்திலே இப்படிப்பட்ட கூடம் அமைக்கும்படியான திட்டம் இருக்கிறதா? இல்லையென்றால் அங்கே அப்படி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1983 சனவரி 28]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருக்கின்ற 10 இடங்களைப் பற்றிச் சொன்னேன். இப்போது மைய அரசு 700 விசைத்தறிகளை அமைக்க அனுமதி வழங்கியிருக்கிறது. அவை எந்த எந்த இடங்களிலே போடப்பட இருக்கின்றன என்பதைப்பற்றி சொல்லவில்லை, இடங்கள் இன்னும் பரிசீலனையில் இருக்கின்றன. கோவை மாவட்டமா அல்லது எந்த மாவட்டம் என்று முடிவாகவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் தனித்தனியாக தனியார்களுக்குக் கொடுத்து அவர்கள் அதை வைத்துக்கொண்டு, பெரிய முதலாளிகள் அந்த நெசவாளர்களை சுரண்டாதவண்ணம் நாம் ஒரு காம்ப்ளக்ஸாக 100, 50 தறிகள் என்ற அடிப்படையில் உரிமங்கள் அவர்களுக்குக் கொடுத்து விசைத்தறிகள் கூடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதிலே சுரண்டுவதற்கோ அல்லது தவறுதலாக பயன்படுத்துவதற்கோ வாய்ப்புகள் இல்லை.

உதகமண்டலத்திலுள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை.

* வினா எண் 38— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் உள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையின் விரிவாக்கமான கலர் போட்டோ பிலிம் தயாரிக்கும் தொழிற்சாலையை தமிழகத்திலேயே ஆரம்பிக்க வற்புறுத்தி மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ மற்றும் ஆ) உதகமண்டலத்தில் உள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையின் கலர் போட்டோ பிலிம் தயாரிக்கும் விரிவாக்கத் திட்டம் சுமார் 150 கோடி ரூபாய் அளவில் தமிழகத்திலேயே துவக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தி மத்திய அரசு தொழிலமைச்சர் மற்றும் பிரதம மந்திரி ஆகியவர்களுக்கு நேர்முகக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. மேலும் தமிழக முன்னாள் ஆளுநர் திரு சாதிக் அலி அவர்களும் மத்திய தொழில் அமைச்சருக்கு அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்த விண்ணப்பத்தையும் இணைத்து மேற்படித் திட்டம் தமிழ்நாட்டில் நிறுவப்பட வேண்டுமென்று வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் பிரதம மந்திரிக்கு ஒரு தந்தியும் அனுப்பியுள்ளார். முதலமைச்சர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS